மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 55/2019

**2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 14–ம் நாள் வெள்ளிக் கிழமை** பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–2 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **செல்வி. S.இவாஞ்சலின், இளநிலை உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : இளையராஜா | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : நடேசன் | வட்டம் | : வேப்பந்தட்டை |
| கிராமம் | : தழுதாழை | வயது | : 46/2025 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(i) 4ம் பிரதிவாதி கீதா வீட்டின் ச.எண். தெரியுமா என்றால் தெரியும். ப.ச.எண்.241/31 பு.ச.எண்.171/2 ஆகும். எனது வீட்டின் சர்வே எண்.241/36 ஆகும். புதிய சர்வே எண் தெரியவில்லை. எனது வீட்டிற்கு தென்புறம் பரமசிவம் என்பவர் உள்ளார் என்றால் பரமசிவனும், பெருமாளும் உள்ளார்கள். பரமசிவம் வீட்டிற்கு தெற்குபுறமாக தான் செல்வராஜ் வீடு உள்ளது என்றால் சரிதான். செல்வராஜ் வீட்டிற்கு தென்புறமாக அங்கம்மாள் வீடு உள்ளது என்றால் சரியல்ல. கிழக்கு புறமாக உள்ளது. வாதி கணேசன் வீட்டிற்கு மேற்புறமும், அங்கம்மாள், செல்வராஜ் வீட்டிற்கு கீழ்புறமும் 2.8 மீ அகலத்தில் பொது சந்து உள்ளது என்றால் சரியல்ல. அங்கம்மாள் கிரையம் பெற்ற பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பரமசிவம் வீட்டிற்கும், எங்கள் வீட்டிற்கும் கீழ்புறமும் மேற்படி சந்து தொடர்ச்சியாக இருந்தது என்று சொன்னால் எனக்கு விவரம் தெரிந்த நாள் முதல் இல்லை. 3ம் பிரதிவாதி செல்வராஜின் அம்மாவும், எனது அம்மாவும் சகோதரிகள் என்றால் சரிதான்.

(ii) வாதி கணேசனின் பட்டாவை நான் நேரடியாக பார்த்தது இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் கீதா, அங்கம்மாள், செல்வராஜ் ஆகியோரின் பட்டாவை நான் பார்த்தது இல்லை என்றால் கீதாவின் பட்டாவை மட்டும் பார்த்துள்ளேன். கீதாவின் பட்டாவில் உள்ள அளவுகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2.8 மீ அளவுள்ள பொது சந்து உள்ளது என்றாலும், 3ம் பிரதிவாதி செல்வராஜ் சின்னம்மா மகன் என்பதால் சந்து இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி 2.8 மீ பொது சந்தில் நான் கழிப்பறை கட்டிடம் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.அது எனது பட்டா இடம் ஆகும். அது பட்டா இடம் இல்லை என்றாலும் பொது சந்து என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.